ந.க.எண்.509/2022/இ1

நகராட்சி அலுவலகம்,
கூடலூர்.
நாள்:– 14.08.2023

<u>சாதாரண கூட்ட அழைப்பிதழ்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சோபகிருது வருடம் ஆவணி திங்கள் 1–ஆம் நாள் (ஆகஸ்ட் மாதம் 18–ஆம் (நாள்:–18.08.2023) வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஓம்/–)லோ.பத்மாவதி
நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி

**<u>நகர்மன்றத்தலைவர் திருமதி.L.பத்மாவதி லோகந்துரை அவர்களால் முன் மொழியப்பட்ட நன்றி தெரிவிக்கும் தீர்மான பொருள்.1</u>**

**தமிழகத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கபட்ட நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குவதற்கு அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியும் மற்றும் பாராட்டும் கூடலூர் நகர்மன்றத்தால் தெரிவித்துகொள்ளபடுகிறது.**

**தீர்மான எண்.497,நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்மொழியப்பட்ட நன்றி தெரிவிக்கும் தீர்மானம் வருகை புரிந்த அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

பொருள்.2

ஆணையாளர் அவர்களின் 06/2023 மற்றும் 07/2023 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.498,பதிவு செய்யப்பட்டது.**

பொருள்.3

நகராட்சி பொறியாளர் அவர்களின் 06/2023 மற்றும் 07/2023 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.499,பதிவு செய்யப்பட்டது.**

பொருள்.4

நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் (2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல்)மதிப்பூதியம் கீழ்கண்டவாறு வழங்குமாறு தெரிவித்து வரப்பெற்ற அரசாணை(நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.07.2023 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பதவி | மதிப்பூதியம் ரூ. |
|---|---|---|
| 1) | நகர்மன்ற தலைவர் | 15000.00 |
| 2) | நகர்மன்ற துணைத்தலைவர் | 10000.00 |
| 3) | நகர்மன்ற உறுப்பினர் | 5000.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.500,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சியில் பழுதடைந்த சாலைகளை மேம்பாடு செய்திட **மாநில நிதி குழு SFC** –2023-24ன் கீழ்கண்டவாறு ரூ.91.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **Improvement of B.T Surface at Ambedcarcolony (123021R292 ), ACF Colony street (123021R283),Anjalaga street (123021R284),2E Type Colony street (123021R285 ), 2E Type Colony street (123021R286 ), 2 F Type Colony First street (123021R287), 2 F Type Colony First street 2 (123021R289) Pallivasal street 3 Unicode (123005R120),2 G Type colony street 1 (123021R304), 2 G Type colony street 3 (123021R306) ,Water tank Road 9 (123010R195) and Kallar East Pudhu Street1 (123002R049) road in Gudalur Municipality.** | **91.00** |
| | **மொத்தம்** | **91.00** |

மேற்படி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.501,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கம்பம் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் இருந்த சாலைகள்,அங்கள்வாடி மையங்கள்,பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் ஆகியவை அமைந்துள்ள இடங்களை கம்பம் ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து நகராட்சி வசம் ஒப்படைத்திட இந்நகர்மன்ற தீர்மானம் எண்:205 நாள்.**30.09.2022**ன்படி தீர்மானம் நிறைவேற்றுப்பட்டது.மேலும்,மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.**12945/2023/**க்யூ**-5** நாள்.**13.04.2023**ன் படி நகராட்சி பகுதியில் உள்ள சாலைகள்,அங்கன்வாடி மையங்கள்,பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் ஆகியவை அமைந்துள்ள இடங்களை கம்பம் ஊராட்சி ஒன்றியத்தால் கூடலூர் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.502,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.7**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண் TN 60 BY 0842 JCB க்கு 2023–2024 ஆம் ஆண்டிற்க்கு செலுத்தவேண்டிய காப்பீட்டு பீரிமியத்தொகை செலுத்த வேண்டி IFFCO-TOKIO General Insureance Co.Ltd நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட வாகனத்திற்கான காப்பீட்டு பீரிமியத்தொகை ரூ**15740./–** ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1 . மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்க்கலாம்

**தீர்மான எண்.503,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.8**

இந்நகராட்சி பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை விதி 2016 –இன் படி திடக்கழிவு மேலாண்மை பணிகளான நுண் உரக்கூடம் மற்றும் வளமீட்டு மையங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர்,சென்னை.அவர்களின் கடித ந.க.எண்.18674/2023/SBM2, நாள்.14.06.2023–இன் படி (Renewal of Authorization) சட்டத்தோடு இயைந்து அதிகாரம் புதுப்பிக்க வேண்டி வலைதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.6200/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.504,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கீழக்கூடலூர், மேற்கு கிராமம், நத்தம் பழைய புல எண்.1216/6,9,12 Part,புதிய புல எண்.2324/79,பரப்பு 0.00.26, சர்க்கார் புறம்புகலில் அமைந்துள்ள ஸ்ரீ வேலடி விநாயகர் திருக்கோவிலுக்கு வட்டாட்சியர் உத்தமபாளையம் அவர்களின் கடித ந.க.எண்.12898/2022/அ5, நாள்.02.06.2023ல் பிரஸ்தாப நிலத்தில் அமைந்துள்ள மேற்படி ஸ்ரீ வேலடி விநாயகர் திருக்கோவிலுக்கு மின் இணைப்பு வழங்க எவ்வித ஆட்சேபணை இல்லை எனத் தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் உரிய அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.0905/2023/அ1)

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.505,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சியில் (SFC) மாநில நிதிக்குழு மானிய திட்டம்- 2023-24 ன் கீழ் இந்நகராட்சி வார்டு எண்-2,5,10,21 ஆகிய வார்டுகளில் தார்சாலை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுவதற்கு 14.07.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இப்பணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை ACCORD ADVERTISING AGENCIES சென்னை மூலம் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.44,150/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.506,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.11

நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை, அவர்களின் கடித ந.க.எண். 3088/2022/துா.இ.தி.1, நாள்.22.03.2023 இல் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சேகராமாகும் மக்கும் குப்பையிலிருந்து விதைப்பண்ணை ரோடு மற்றும் பாரவந்தான் சாலையில் உள்ள நுண் உரக்கூடங்களில் தயாரிக்கப்படும் உர மாதிரிகளை விவசாய கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம், மதுரை அவர்களின் மூலமாக பரிசோதணை மேற்கொள்ள மாதிரி ஒன்றிக்கு ரூ3850/—வீதம் இரண்டு நுண் உரக்கூடத்திற்க்கு ரூ.7700/—ஐ வங்கி வரைவேலை எடுத்து அனுப்பவேண்டி உள்ளதால் மேற்கண்ட செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.507,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.12

கூடலுார் நகராட்சி 5எல்லைக்குட்பட்ட மேலக்கூடலுார்(வடக்கு)கிராமம் சர்வே எண்கள் -1220/5 , 1222/2, 1234/3,1235/2B,1236/2A,1237/1 மற்றும் 1238ல் கட்டுப்பட்டுள்ள 15.728 ஏக்கர் (63650.00 ச.மீ) பரப்பளவுள்ள இடத்தில்,உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு திரு.R.குமார் என்பவர் விண்ணப்பித்ததை தொடர்ந்து, நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.VF7CSIOD/5258/2023-TCP-ன்படி பரிந்துரைக்கப்பட்டு உத்தேச குடியிருப்பு,மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு வரைபடம் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்-15838.74 ச.மீ,பூங்கா-4868.42 ச.மீ மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கான இடம்-262.60 ச.மீ போன்ற இடங்கள் மனுதாரர் மூலம் இந்நகராட்சிக்கு, தானப்பத்திர ஆவண எண்:4491/2023 நாள்.07.08.2023ன்படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.508,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.13

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் தனியார்மூலம் பராமரிக்கும் பணிக்கு 8 தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்கண்ட பணியானது 30.07.2023—ஆம் தேதியுடன் தங்களின் ஒப்பந்த காலம் முடிவடைகிறது. பொது சுகாதாரத் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட பணியினை ஏற்கனவே மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திரு.கே.வனராஜ் அவர்கள் மூலமாக மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள 01.08.2023 முதல் 31.01.2023 வரை ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு..

**அலுவலகக்குறிப்பு:-** பொது சுகாதாரத் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட பணியினை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திரு.வனராஜ் ஒப்பந்ததாரருக்கு மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள **(01.08.2023** முதல் **31.01.2023** வரை**)** ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.509,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சிக்கு CGF/IGFF 2018-19ன் கீழ் ரூ.1368.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் செயல்படுத்தப்பட்டு அணைத்து பணிகளும் முடிக்கப்பட்டு 19.05.2023 ஆம் நாளன்று நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் லோயர் கேம்பில் தலைமை நீரேற்று நிலையத்தினுள் ஏற்கனவே பயன்பாட்டிலிருந்த தன்னுந்து குழாய்களை புதிய தொட்டியுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ.4,60,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.510,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

கூடலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்-7,8,9,10,12 ஆகிய வார்டுகளில் உள்ள குடிநீர் வால்வுகளுக்கு மூடியுடன் கூடிய வால்வு தொட்டிகள் அமைப்பதற்கு ரூ.2,75,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.511,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -2, கீழக்கூடலூர் கம்போஸ்ட் வடக்கு தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய புதிய சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.2,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.512,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.17**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -3, சுந்தராஜாபுரத்தில் உள்ள ஆண்கள் சமுதாய கழிப்பறையில் பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.513,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.18**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -4, பத்துநோன்பு பள்ளிவாசல் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய புதிய சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.2,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.514,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.19**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -15, அருந்ததியர் ஓடைதெரு அருகில் உள்ள தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய புதிய சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.2,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.515,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.20**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -16, போர்டு ஸ்கூல் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறுடன் கூடிய புதிய சிறுமின் விசை பம்பு அமைக்க ரூ.2,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.516,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.21**

கூடலூர் நகராட்சி வார்டு எண் -18, கன்னிகாளிபுரம் மேற்கு மெயின் 1வது தெருவில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க ரூ.4,30,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.517,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.22

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தைக்கட்டணம் 01.04.2023 முதல் நகராட்சி மூலம் துறைரீதியாக வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும், இரசீதுகள் (TOKEN) தேவைப்படுவதால் தயார் செய்வதற்கு செலவீனம் ரூ.10000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.518,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.23

கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை புதியதாக அமைப்பதற்கு ரூ.1,30,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.519,அனுமதிக்கப்பட்டது**

**(ஒம்/—)லோ.பத்மாவதி**
**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**